**உரிமைக் காப்புறுதி நிதியம் - 2012**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை உரிமைகளைப் பதிவு செய்தலுக்கான காப்புறுதி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 2,470,006 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,234,312 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,235,694 தொகையான அதிகரிப்பினைக் காண்பித்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் உரிமைகளைப் பதிவு செய்தல் வருமானம் ரூபா 1,039,596 இனாலும் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 216,226 இனாலும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கான பிரதான காரணமாக இருந்தது.

**3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுமதிகளுக்கிடையே கருத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால்

பாதீடானது பயனுறுதியான ஒரு கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் பாதீட்டிற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்தலுக்கான அதிகாரச் சட்டத்தின் மூலம் காணி தொடர்பாக உரித்துறுதிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் ஆவணப்படுத்தப்படுவதற்குப் பதிலாக காணிகளின் உரிமைகளைப் பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் உரிமைகளைப் பதிவு செய்தலின் போது ஏற்படக்கூடிய மோசடியான செயற்பாடுகளின் காரணமாக அல்லது ஏனைய முறையிலான கைமாற்றல்களின் காரணமாக உரிமை தொடர்பாக ஏற்படுகின்ற பிழையான தீர்மானத்தினால் இரு தரப்பினர்களுக்கும் ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்பாக அரசாங்கம் பொறுப்பளிக்க வேண்டியிருந்ததுடன், இதன் பிரகாரம் ஏற்படுகின்ற நட்டத்திற்காக இழப்பீட்டை வழங்குவதற்கு இவ் அதிகாரச்சட்டத்தினால் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த நோக்கத்துடன் 2010 மார்ச் 01 ஆந் திகதி தொடக்கம் அமுல்படும் வகையில் உரிமைக் காப்புறுதி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த இழப்பீட்டை ஈடு செய்யும் போது அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டியிருந்ததுடன் நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தீர்ப்பின் பிரகாரம் உரிய தரப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணம் தீர்மானிக்கப்படுகின்றது.